[1979 நவம்பர் 8

குருத்துக்குழி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* வினா எண் 144—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை துமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, நஞ்சநாடு கிராமம், குருத்துக்குழியூரிலுள்ள சொந்த வீட்டு மனை இல்லாத அரிசன குடும்பங்கள் அங்குள்ள சர்வே 109/1லுள்ள அரசு புறம் போக்கு நிலத்தில் வீட்டுமனை பட்டா கேட்டுள்ளனரா?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) நீலகிரி மாவட்ட விவசாய தொழிலாளர் சங்கத் தலைவர், உதகமண்டலம் தாலுக்கா, நஞ்சநாடு கிராமம், குருத்துக்குழி சர்வே எண் 109/1லுள்ள நிலத்தை அரிசன மக்களுக்கு விவசாயத்திற்கும், வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கும் ஒப்படை செய்யுமாறு விண்ணப்பித்துள்ளார்.

(ஆ) நஞ்சநாடு கிராமம், சர்வே எண் 109/1லுள்ள 42.90 ஏக்கர் 'ஒதுக்கீடு நிலத்தில்' (Reserved land) 10.00 ஏக்கர் நிலத்தை மாற்றம் செய்து, அரிசன மக்களுக்கு வீட்டு மனையாக ஒப்படை செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி நிலத்தை ஒப்படை செய்வது குறித்து, கிராம மக்கள் ஆட்சேபனைகள் தெரிவித்ததால், பட்டா நிலத்தில் வசித்து வரும் அரிசனங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு வழங்கவும் மற்றும் விருப்பப்பட்டவர்களுக்கு சர்வே எண் 200, 201 பகுதியில் குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இது விஷயமாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நீலகிரிக்கு வந்திருந்தபோது அவர்கள் கொடுத்த பெட்டிஷன் சர்வே 109/1 நிலத்தை அங்குள்ள வசதி படைத்த ஜாதி இந்துக்கள், தாங்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இந்த ஏழை ஹரிஜனங்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க விடாமல் பயமுறுத்துவதோடு வேறு பல கிரிமினல் வழக்குகள் கூட போட்டிருக்கிறார்கள். எனவே அந்த ஏழை அரிசன மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்து இந்த அரசு அந்த அரிசன மக்களுக்கு நிலம் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆக்கிரமிப்பு என்பது வேறு, ஒப்படை செய்வது என்பது வேறு. 1942 ஆம் ஆண்டு கூட அது குத்தகைக்கு விடப்பட்டது. அப்போது கிராமத்து மக்கள் எல்லாம் ஆட்சேபணை செய்தார்கள். எங்கள் மேச்சல் துறைக்கு வேண்டுமென்று சொன்

1979 நவம்பர் 8]

னார்கள், அப்போது ரத்து செய்துவிட்டார்கள். 1964-ம் ஆண்டு 22 ஆண்டுகள் கழித்து காட்டிலாகாவுக்குக் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகும் ஆட்சேபணை செய்தார்கள். ஆகையால் ரத்து செய்யப்பட்டது. இப்போது ஒரு பிரச்சனை என்ன வென்றால், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பை வெளியேற்றுவது வெகு இலகு. அதைச் செய்வதற்கு இன்றைக்கும் அரசு தயாராக இருக்கிறது.

ஆதி திராவிட மக்களுக்கும், பனகல் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டிருக்கிறது. வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, அதற்குப் பிறகு ஆங்காங்கே கேட்டவர்களுக்கெல்லாம் அவரவர்கள் இருந்த ஆதி திராவிட மக்களுக்கும், நிலங்கள் "பார்ட்டர் அரேஞ்ஜ்மெண்ட்" என்ற நிலைமையிலே ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஆதி திராவிட மக்களுக்கு ஒப்படை செய்யவேண்டும், வழிவகை செய்ய வேண்டும், படகர் மக்களுக்கும் இவர்களுக்கும் கொடுப்பதற்கு சர்வே எண் 200, 201 பகுதியில் வீட்டுமனை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, குடியிருக்கிற இடத்தில் அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படும் என்று சொன்னார்கள், அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கவில்லை அந்த இடத்தை வேண்டும் என்ற அந்த அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடாது, அந்த இடத்தில் அவர்களைக் குடியேற விடக்கூடாது என்று செல்வாக்கு உள்ள சிலர் மேலே வரை சென்று, அந்த நிலத்தைக் காட்டிலாகாவிற்குக் கொடுக்கலாம், லீசுக்கு விட்டு விடலாம், அல்லது அரிசனங்களுக்குக் கொடுக்கலாம் இருக்கலாம் என்ற வகையில் பல தந்திரங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள், இந்த முயற்சிகளைத் தகர்த்து ஏழை மக்களுக்குச் சாதகமாக சாகுபடிக்கு என்று அல்ல வீட்டு மனையாகக் கொடுக்க வேண்டிய உறுதியான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே. ஆக்கிரமப்புகளை அகற்றுவதிலே இந்த அரசு பின் வாங்காது என்று சொல்லிவிட்டேன். ஆக்கிரமிப்பு நீக்கிவிட்டு மேய்ச்சல் தரையாக்க வேண்டும் என்று மனு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். படகர் சமுதாயத்திற்கும், ஆதித் திராவிட மக்கள் சமுதாயத்திற்கும் இடையே ஒரு மோதல் உண்டாக்க அரசு விரும்பவில்லை. ஆகவே. அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். கொடுத்து விட்டால் மோதல் ஏற்படும். ஒன்றை மட்டும் சொல்வேன். இந்த அரசு ஏழைகள் பக்கமும் ஆதித் திராவிட மக்கள் பக்கமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே. அந்த ஆதி திராவிட மக்களுக்கு வேறு இடம் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனைக் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டது? விண்ணப்பித்த அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மொத்தம் 229 குடியிருப்புகள் உள்ளன. அந்த 229 குடியிருப்புகளில் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது, யார் யாருக்குக் கொடுக்கப்படவில்லை என்கிற கணக்கு என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் தருகிறேன். ஆனால் ஒன்று சொல்வேன், அந்த 229 குடியிருப்புகளுக்கும் நிச்சயமாக இடம் கொடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சில உறுப்பினர்கள் கையை உயர்த்தினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்காவில் உள்ள அரிசன குடும்பங்களுக்கு அரசுப் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா கொடுப்பது பற்றியதாகும். மற்ற மாவட்ட உறுப்பினர்களுக்கு இதில் சம்பந்தம் இல்லை. வற்புறுத்திக் கேட்கக்கூடாது. மரபு கெட்டுவிடும். நேரமும் வீணாகும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, குடியிருப்பவர்களை இடத்தை விட்டு காலி செய்து, மேய்ச்சல் தரையாக ஆக்கவேண்டும் என்று மனு போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் இந்த அரசைக் கேட்கவிரும்புவது, குடியிருக்கிற இடம் முக்கியமா, மேய்ச்சல் தரை ஆக்குவது முக்கியமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர் பூராவும் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். நான் முதலிலேயே சொன்னேன். அரசு ஏற்கனவே குடியிருப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தில் உள்ள விளக்கங்களை பூராவும் மாண்புமிகு உறுப்பினர் அறிந்து இருந்தால், இதைக் கேட்டு இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். குடியிருப்புச் சட்டத்தின்படி யார் எங்கே குடி இருக்கிறார்களோ, அது அரசு நிலமாக இருந்தாலும சரி தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படும். அவர்களை அகற்ற முடியாது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, இதைப்போன்று பல இடங்களில் அரசுக்குச் சொந்தமாக புறம்போக்கு நிலங்கள்..
(மணியடிக்கப்பட்டது.)